மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: விவாதம்தான் இருக்கக் கூடாது என்று இருக்கிறது. பிரச்சினையின் அவசரம் அவசியத்தை முன்னிட்டு ஒன்றிரண்டு விளக்கங்களை கேட்கவும், அவற்றை தலைவர் அனுமதிக்கவும் உரிமை இருக்கிறது.

THE HON. THIRU S. ARANGANAYAGAM: Sir, no question shall be asked.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: நாட்டு மக்கள் இந்தப் பிரச்சினையில் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பதை முன்னிட்டு சில விளக்கங்களை அனுமதித்ததில் தவறில்லை.

THIRU G. SWAMINATHAN: For the clarification of the Hon. Minister, may I say that it has been accepted in this House as a matter of convention?

2. அறிவிப்பு.

அரசு உறுதிமொழிக் குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம். ..

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மேலவை விதி 175 (1)-ன்படி அரசு உறுதிமொழிக் குழுவின் உறுப்பினர்களாக கீழ்க்கண்ட உறுப்பினர்களை நியமனம் செய்துள்ளேன் :—

1. திரு. எம். சங்கரலிங்கம்
2. திரு. இரா. சாம்பசிவம்
3. திரு. எல். பலராமன்
4. திரு. ஜார்ஜ் கோமகன்
5. திரு. எம். எம். பக்கர்
6. திரு. ஆர். சக்திமோகன்
7. திரு. பி. ஆர். தாமஸ்.

விதி 176 (1)-ன்படி இக்குழுவின் தலைவராக திரு. எம். சங்கரலிங்கம் அவர்களை நியமித்துள்ளேன்.